**வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை: முனைவர் (திருமதி).சி.கௌசல்யா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

**ந.க.எண்:74/அ/ 2019, நாள்: 24.09.2021**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியமைப்பு – தேனி மாவட்டம், வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - நேரடி நியமனம் – தொகுதி IV – 2015-2016 2016-17 மற்றும் 2017-2018 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – திருமதி அ.தேவி சண்முகவடிவு இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்.1018/PSD.G2/2019, நாள்: 13.02.2019 மற்றும் 01.04.2019.
2. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7881/பி1/2019, நாள்: 28.02.2019 மற்றும் 24.04.2019.
3. இவ்வலுவலக முதல்வர் செயல்முறைகள் ந.க.எண்.74/அ/2019 நாள்: 04/03/2019.
4. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7881/பி2/2019, நாள்: 03.12.2019 .

-------------

பார்வை 1-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தொகுதி IV 2015-2016, 2016-17 மற்றும் 2017-2018 ஆண்டுகளுக்கு தெரிவு தொகுதி IV தேர்வில் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3-இல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின்படி தனியர் பணிநியமனம் செய்யப்பட்டு 07.03.2019 முற்பகல் திருமதி அ.தேவி சண்முகவடிவு இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து பார்வை 4-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க, இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின்படி திருமதி அ.தேவி சண்முகவடிவு இளநிலை உதவியாளர் என்பார் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**"இப்பணி வரன்முறை தொகுதி IV 2015-2016, 2016-17 மற்றும் 2017-2018 பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது"**

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்று, இக்காலகத்திற்குள் பவானிசாகர் மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

முதல்வர் 24/9/21
அரசு கலை (ம) அறிவியல் கல்லூரி
வீரபாண்டி - 625 534
தேனி மாவட்டம்.

பெறுநர்:

திருமதி அ.தேவி சண்முகவடிவு, இளநிலை உதவியாளர் 24/9/2021

நகல்:-

1. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை
2. உபரி-2